**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண்.420/2019** **நாள். 27.06.2024**

2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 27 ம் நாள் மனுதாரர் தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளையபெருமாள் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஏழுமலை | சாதி | |
| கிராமம் | கெடார் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 30 |

**ம..சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-1 ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 1** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.1- அனந்தபுரம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல்.
2. ம.த.சா.ஆ.2 - விபத்து ஏற்படுத்திய வாகனத்தன் காப்பீட்டு ஆவணம் உண்மை நகல்.
3. ம.த.சா.ஆ.3 - செஞ்சி அரசு மருத்துவமனையில் பதியப்பட்ட விபத்து பதிவேட்டு உண்மை நகல் மற்றும் காயச்சான்று.
4. ம.த.சா.ஆ.4 – பாண்டி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான சான்றாவணம்(டிஸ்சார்ஜ் சம்மரி)- உண்மை நகல்.
5. ம.த.சா.ஆ.5 - சென்னை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் 10.07.2019 முதல் 05.08.2019 வரை 27 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான சான்றாவணம் மற்றும் அறுவை சிகிச்சை செய்ததற்கான சான்றாவணம்(டிஸ்சார்ஜ் சம்மரி)- உண்மை நகல்
6. ம.த.சா.ஆ.6 – மனுதாரின் ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது)

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**